முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் (பொறுப்பு) மு.மேகவர்ணம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.8.2025) கொளத்தூர், பெரியார் நகர் பேருந்து நிலையத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ரூ.104,43 கோடி மதிப்பீட்டிலான புதிய 248 BSVI மகளிர் விடியல் பயண பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், பி.கே.சேகர்டாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காசர்லா உஷா, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் கன்சோங்கம் ஜடக் சிரு, முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ். மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இதுவரை 30 லட்சம் பயணிகள் பயன்படுத்தியுள்ளனர்!

திருச்சி பஞ்சப்பூர் கலைஞர் பேருந்து நிலையத்தில் 60,206 பேருந்துகள் இயக்கம்!

அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

திருச்சி, ஆக. 27 -

திருச்சி பஞ்சப்பூர் புதிய கலைஞர் பேருந்து நிலையத்தில் 1.8.25 முதல் 23.8.25 வரை 60,206 பேருந்து புறப்பாடுகள் நடந்துள்ளது. 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி உள்ளனர் அமைச்சர் நேரு பேச்சு.

தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு சார்பில் திருச்சி பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த புதிய கலைஞர் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக பாராட்டு விழா திருச்சி YWCA வளாகத்தில் நடைபெற்றது.

இந்த பாராட்டு விழாவில் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில்,

திருச்சி பஞ்சப்பூர் கலைஞர் பேருந்து நிலையம் 16.07.25 முதல் 31.07.25 வரை 41,896 பேருந்துகள் நாளொன்றுக்கு 1,19,489 பேர் வந்துள்ளார்கள்.

1.8.25 முதல் 23.8.25 வரை 60,206 பேருந்து புறப்பாடுகள் நடந்துள்ளது. 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி உள்ளனர்.

பஞ்சப்பூர் பகுதியில் ஐடி பார்க் வர உள்ளது. மிகப் பெரிய மாலும் வர உள்ளது

கொடிசியா போல் திருச்சியில் ஒரு அரங்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பஞ்சப்பூர் பேருந்து நிலையம் அருகே 150 ஏக்கரில் ஏரி உள்ளது அது சீரமைக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் உள்ள மற்ற ஏரிகளும் சீரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று பள்ளி கல்லூரி படிக்கும் மாணவ மாணவிகள் படிப்பு முடிந்து வெளி நாடு சென்று விட்டு மீண்டும் திருச்சிக்கு வரும் பொழுது திருச்சியே ஒரு மாறுபட்ட முகமாக இருக்கும். எல்லா நகரங்களையும் விடவும் திருச்சி நகரம் சிறப்பாக இருக்க வேண்டும் என முதலமைச்சர் கூறி தான் பஞ்சப்பூர் பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்கினார்.

தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கு தேவையான மக்கள் பெருமைப்படக்கூடிய அளவிலான அனைத்து பணிகளும் நடைபெறுகிறது.

பாட்டு பாடி பெயர் வாங்கிய புலவர்கள் உண்டு சிலர் குற்றம் கண்டுபிடித்து பெயர் வாங்குவார்கள் இங்கு பேசிய சிலரும் பேருந்து நிலையத்தில் இன்னும் சில வற்றை செய்ய வேண்டும் என பேசினார்கள்.

நீங்கள் சொல்வதை செய்யக்கூடிய வாய்ப்பை பொதுமக்கள் எங்களுக்கு தந்துள்ளார்கள் அதனால் தான் நீங்களும் எங்களிடம் இதை செய்ய வேண்டும் என கூறுகின்றீர்கள்.

சட்டமன்றத்தில் பாஜக உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும்போது சென்னையை போல் கோவை இருக்க வேண்டும் என நான் கேட்கவில்லை திருச்சியை போல் கோவை இருக்க வேண்டும் என பேசினார். அப்பொழுது முதல்வர் என்னை பார்த்து சிரித்தார்.

தி.மு.க. ஆட்சியில் திருச்சி மாநகரமே சுத்தமான மாநகரமாக இருந்து வருகிறது.

உய்யக்கொண்டான் வாய்க்காலில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்காக 130 கோடி ரூபாய் செலவில் கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் ஆற்றில் விடும் அந்த பணியும் நடைபெற்று வருகிறது. என்று பேசினார்

இந்த விழாவில் மாநகராட்சி மேயர் அன்பழகன், தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு கவுன்சில் செயலாளர் புஷ்பவனம், டால்மியா சிமெண்ட் முன்னாள் நிர்வாக இயக்குனர் கோபாலகிருஷ்ணன், காவிரி கல்லூரி நீலகண்டன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜயா ஜெயராஜ். கருணாநிதி கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன் ,துர்கா தேவி கவுன்சிலர்கள் கலைச்செல்வி புஷ்பராஜ், பவுல்ராஜ், கமால் முஸ்தபா ராமதாஸ், தனசேகர் வழக்கறிஞர் அந்தோணி தஸ்தகீர் சதீஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனையாம்

திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் 10வது பட்டமளிப்பு விழா!

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார்!

திருவாரூர், ஆக. 27 –

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்டமளிப்பு விழா 2025 செப்டம்பர் 3 ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது. பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தராக பேராசிரியர் மு.கிருஷ்ணன் சிறப்புடன் செயலாற்றி வருகிறார்.

பட்டமளிப்பு விழாவில் இந்திய குடியரசு தலைவர் மற்றும் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் மேன்மையர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது சாதனைத்திட்டமான தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்டமளிப்பு விழாவில் இந்திய குடியரசு தலைவர் உரை நிகழ்த்தி மாணவர்களுக்கு ஊக்கம் அளிப்பார். மேலும் தங்க பதக்கம் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்குவார்.

இந்த ஆண்டு மொத்தம் 1,010 மாணவர்கள் பட்டம் பெறுகின்றனர். இதில் 568 பெண்கள், 442 ஆண்கள் ஆவர். இதில் 45 மாணவர்கள் (34 பெண்கள் 11 ஆண்கள்) தங்கப்பதக்கம் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 44 மாணவர்கள் முனைவர் பட்டம் பெறுகின்றனர். (இதில் 27 பெண்கள் மற்றும் 17 ஆண்கள்).

நேரில் பட்டம் பெறும் மாணவர்கள் மொத்தம் 771. இதில் 454 பெண்கள் மற்றும் 317 ஆண்கள் ஆகும்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், 2009 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியின்போது திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், 13 கல்வி புலன்களின் கீழ் 28 துறைகளைக்கொண்டு சிறந்து விளங்குகிறது. தேசிய தர மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (NAAC) ஆய்வில், 'ஏ ப்ளஸ்' (A+) தர அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலின்படி (NIRF), கடந்த மூன்று ஆண்டுகளாக நூறு சிறந்த பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

மேலும், மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு ஆய்வு நிறுவனங்களிடமிருந்து பல்வேறு மானியங்களைப் பெற்று, பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. பல்கலைக் கழகத்தின் ஆய்வுக்கான குறியீடான, எச் இன்டெக்ஸ் அளவுகோலில், 2025 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 84 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்குவதோடு கல்வியின் பலன்களை, இந்தியாவின் கிராமப்புறங்களை சென்று சேர்க்கும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்கி வருகின்றது.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் நகர்ப்புற அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ – மாணவிகள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டத்தை திருவெறும்பூர் அருகே பெல் வளாகத்தில் உள்ள பாயிலர் பிளான்ட் நடுநிலைப்பள்ளி, துவாக்குடி என்.ஐ.டி.யில் உள்ள மண்டல பொறியியற் கல்லூரி நடுநிலைப்பள்ளி ஆகியவற்றில் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ண பிரியா, திருச்சி டி.ஆர்.ஓ. ராஜலட்சுமி, கூத்தைப்பார் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், துவாக்குடி நகராட்சி தலைவர் காயாம்பு, கூத்தைப்பார் பேரூர்ச் செயலாளர் தங்கவேல் மற்றும் அரசு அலுவலர்களும், கட்சி பிரதிநிதிகளும், பள்ளி ஆசிரியர் பெருமக்களும் மாணவ – மாணவிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் வணிகர் நல வாரியத்தில்

தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் சிலரை உறுப்பினர்களாக சேர்த்திட வேண்டும்!

கிருஷ்ணகிரியில் காசி முத்து மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

கிருஷ்ணகிரி, ஆக. 27 -

கிருஷ்ணகிரியில் தி.மு.க. வர்த்தகர் அணியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம், மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன் வரவேற்றார். மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் பி.டி. அன்பரசன் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1) ஒன்றிய அரசு நிதிப் பரிமாற்றத்தில், தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்த போதும், தளபதி ஒற்றை மனிதனாக விடிந்தால் புதிய திட்டம் என திட்டங்களை அறிவித்தும், பொருளாதார முன்னேற்றத்தில் 14 ஆண்டுகளுக்கு பின் இந்தியாவிலேயே முதலிடத்தை பெற்றுத்தந்த தங்கத் தளபதிக்கு வர்த்தகர் அணி தன் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறோம்.

2) தமிழக அரசின் வணிகர் நல வாரியத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் சிலரை உறுப்பினராக நியமித்திட, தரணி போற்றும் தலைவர் பாதம் தொட்டு வேண்டுகிறோம்.

3) வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக ரூ.500 கட்டணத்தை பதிவு செய்யும் காலத்தை வருகிற நவம்பர் மாதம் வரை நீட்டித்து தந்தமைக்கும். விபத்தில் வணிக உறுப்பினர்கள் இறக்கும் நேரில் ஏற்கனவே வழங்கி வந்த ரூ.3 லட்சத்தை, ரூ.5 லட்சமாக உயர்த்தி தந்தமைக்கும் தங்கத் தளபதிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

காதர்மொய்தீனுக்கு தகைசால் தமிழர் விருது!

4) இந்திய யூனியன் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தின் வழி வந்த பேராசிரியர் காதர்மைதீன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருது வழங்கிய, தமிழக அரசின் கதாநாயன், தமிழக முதல்வர் திராவிட தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

5) தமிழகத்தில் பா.ஜ.க. பலருக்கு முகவரி தந்தது. ஆனால், தமிழக பா.ஜ.க. விற்கு முகவரி தந்தவர் இல.கணேசன் அவர்கள் தான். அந்த இல.கணேசன் மறைந்த போது, அவர் நாகலாந்து கவர்னராக இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய மரியாதையும், தேவையான அனைத்தும், தமிழ்நாடு முதல்வர் தளபதிக்கும், அவரது உத்தரவை செவ்வனே செய்து முடித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், பண்பாடு மாறாமல் பா.ஜ.க. மூத்த தலைவர் இல.கணேசனுக்கு உதவிட்ட, தமிழக முதல்வர், அண்ணா வழி வந்த தர்மதுரை தளபதிக்கு இந்த மாமன்றம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அமெரிக்க அதிபர் டிரம்புக்கு அடி பணிந்த பிரதமர் மோடி!

6) வங்கதேசத்தில் போர் நடைபெறும் போது. அமெரிக்க போர் கப்பல்கள், இந்திய கடல் எல்லையை ஒட்டி வந்த போது, அந்த மிரட்டல்களுக்கு எல்லாம் அடிபணியாமல். துணிச்சலாக வங்கதேசத்தை பிரித்துக் கொடுத்தவர் அன்னை இந்திராகாந்தி. ஆனால், இன்று பாகிஸ்தான் பிரச்சினையில் மோடிக்கு துணிச்சல் இல்லாமல், அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு அடிப்பணிந்து போர் நிறுத்தம் செய்தார். இந்த போர் நிறுத்தம் செய்யப்பட்டதற்கு நான் தான் காரணம் என்று 29 முறை அதிபர் டிரம்ப் கூறியும், அதற்கு பிரதமர் மோடி மறுப்பும் தெரிவிக்கவில்லை. போர் நிறுத்தம் செய்யப்பட்டதற்கு அதிபர் டிரம்ப் தான் காரணம் எனவும் கூறவில்லை. மறுத்தால் தனக்கு இழுக்கு என்பதால், அமெரிக்கவின் வரி விதிப்பால் இந்திய வணிகர்களின் சட்டையில் அழுக்கு

இந்திய பொருட்கள் மீது 50 சதவீதம் வரி விதிக்கப் பட்டதால், தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் இருந்து நாள்தோறும் 4.50 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டு தேக்கமடைந்துள்ளது. இதே போல், கோயம்புத்தூரில் இருந்து ஆயிரக் கணக்கான கிரைண்டர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்காவின் இந்த வரி விதிப்பின் மூலம் இந்தியாவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு. விலைவாசி ஏறும். வணிகர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பிற்கு காரணமான ஒன்றிய பிரதமருக்கு எங்களது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

7) பத்திரப்பதிவு முந்தைய ஆட்சியை விட குறைவு என்றாலும் சொத்தின் மதிப்பை உயர்த்தி காட்டுவதால். அதிகவரி கட்டுவது மட்டுமல்லாது, வருமானவரி துறைக்கு காட்டாது பணத்திற்கு அபராத வரி கட்ட வேண்டிய சூழல் வருகிறது. எங்களது பணம் ஒன்றிய அரசுக்கு எந்தவகையிலும் செல்ல கூடாது என்பதை இம்மாமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

8) விதிமீறல் கட்டிடங்களுக்கு ஊராட்சி அலுவலர்கள் சீல் வைக்க அரசு அனுமதியளித்திருப்பது முறைகேடுகளுக்கு பெருமளவு வழிவகுக்கும். எனவே, விதிமீறல் கட்டிடங்களுக்கு சீல் வைக்க அனுமதியளித்திருக்கும் சட்டத்தை எதிர்த்து வழக்கு போட வேண்டுகிறோம். விளம்பர பதாகைகள் 10 மீட்டர் உயர்த்தி வைக்க. கமிட்டி வைத்து கொள்ள அனுமதி வேண்டுகிறோம்.

9) அடகுக் கடை வணிகர்களை விதிகளுக்கு புறம்பாக காவல்துறையினர் அத்துமீறல் இல்லாமல் உரிய சம்மன் அளித்த பின்னரே சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

10) சமூக விரோதிகளால் அல்லது விபத்துகளில் அகால மரணம் அடையும் சிறு, குறு வணிகர்களின் குடும்பத்தில் தகுதியுள்ள, கல்வி வாரிசுதார்களுக்கு அரசு பணி வழங்கிட பின்புலம் உள்ள வேண்டும்.

சுங்கக் கட்டண உயர்வை நிறுத்துக!

11) காலவாதியான சுங்கச் சாவடிகள் மற்றும் நகர்புறத்தில் இருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள சுங்கச்சாவடிகளை, மாநில, ஒன்றிய அரசுகள் அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், ஆண்டுதோறும் சுங்கக்கட்டணம் உயர்த்தப்படுவதை நிறுத்த வேண்டும். தமிழகத்தில் புதிதாக சுங்கச்சாவடிகள் வருவதை தடுக்க வேண்டும்.

12) நடுத்தர வாழ்வாதாரம் கொண்ட நீலகிரி மக்களின் வளர்ச்சிக்கு இடையுறாக இருக்கும் இபாஸ் முறையை முற்றிலும் நீக்க வேண்டும்.

13) தொழில் வணிகத்தில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரும். சிறப்பான தொழில் வணிகர்களுக்கு பிறத்துறைகளில் தமிழக அரசு விருது வழங்கி ஊக்கப்படுத்துவதை போல், தொழில் வணிகர்களுக்கும் விருது வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

14) தமிழகத்தின் முக்கிய நகரங்கள் தொடங்கி, கிராம புறங்கள் வரை வர்த்தகத்தை தொடங்க கார்பேரட் நிறுவனங்கள் வணிகவளாகங்களை கட்ட வேகத்தை காட்டி ஆன்லைன் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதை தடுத்து நிறுத்திட வேண்டுகிறோம்.

மகளிர் சுயஉதவிக்குழு கடன் நிலுவை ரத்து!

15) மகளிர் சுயஉதவிக்குழு வாங்கிய கடனில் நிலுவைத் தொகை ரூ.2,674.64 கோடி தள்ளுபடி செய்தும், நகைகடனில் சுமார் ரூ.6,000 கோடி தள்ளபடி செய்த தங்கத்தளபதிக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

16.) மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன்' திட்டங்கள் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கி வரும். நல்ல உள்ளம் படைத்த தளபதிக்கு என்றும் நன்றி கூறுவோம்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.வி.எஸ்வி. மணிவிஜயன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள்:

கே.செல்வம், வி.ஜெயன், நா.முருகவேல், பி.டி, பாண்டிச்செல்வம், எஸ். முத்துசெல்வி, என். காமரை பாரதி, உமரிசங்கர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வே.பா.மணி இராமர், பெ.சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ். ராமகிருஷ்ரைன், பி.தர்ம்செல்வன், ஆ. சத்தியமூர்த்தி, கேவிஎஸ். சீனிவாசன், பி.டி. அன்பரசன், மாவட்ட நிர்வாகிகள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பி.வி.எஸ்.பி. மணி விஜயன், தாம்பரம் சீப்ஸ் மணி, சென்னை வடகிழக்கு மாவட்ட அமைப்பாளர் தியாகராஜன், தருமபுரி மாவட்ட தலைவர் - முருகன், திருப்பத்தூர் மாவட்ட அமைப்பாளர் சரவணன், மாவட்ட தலைவர் ஜெயசீலன், மயிலை பாலு, காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் தினகரன், கோவை மத்திய மாவட்டம் மாரிசெல்வராஜ், மாவட்ட அமைப்பாளர் வி. ராஜா, திருப்பூர் தெற்கு தங்கராஜ், ஈரோடு கே.எம்.இராஜசேகர், ஈரோடு என்.எஸ். மணி, கடலூர் மேற்கு - குண (எ) குணசேகரன், விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் - வெங்கடேசன், தென் சென்னை - இராமமூர்த்தி, மயிலாடுதுறை - மோகன் அருண்குமார், நெல்லை - ஹேக்தாவுத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மஹால் திருமண மண்டபத்தில் கழகச் சட்டத்திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.